# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 48/2015**

திரு. P. ஆறுமுகம்,
த/பெ. பெரியசாமி கவுண்டர்,
திரு. A. கனிஷ்கா,
த/பெ ஆறுமுகம்,
43 G, கணேஷ் கார்டன்,
சத்தி ரோடு,
கணபதி அஞ்சல்,
கோயம்புத்தூர் 641 006. . . . . .. . . .மேல்முறையீட்டாளர்
(திரு V. ஹரிதாசன்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கோயம்புத்தூர் மின்பகிர்மானம் / மாநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத் ,
கேயம்புத்தூர் – 641 012. . . . . . . . .. எதிர்மனுதாரர்
(திரு. P.முருகேசன், உதவி பொறியாளர்/கணபதி)

**கேட்புரை நாள் 17–12–2015**

**ஆணை நாள் 28–01–2016**

திரு. P. ஆறுமுகம் மற்றும் A. கனிஷ்கா, கணேஷ் கார்டன், கோயம்புத்தூர் அவர்களின் 29.5.2015 நாளிட்ட மனுக்கள் மேல் முறையீட்டு மனு எண் 48/2015 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் மீது கேட்புரை 17.12.2015 அன்று மின் குறைதீர்ப்பாளர் முன்பாக நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்,

எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இரு தரப்பினராலும் கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறை தீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

விவசாய மின் இணைப்பை இடமாற்றம் செய்வது குறித்து கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சென்னை தலைமைப் பொறியாளர் அவர்களின் **1.12.2011** தேதிய சுற்றறிக்கை கடித எண் SE/RE&I(D)/EE/RE/A1/Doc/D1519/2011 குறிப்பாணையில் குறிப்பிட்ட **1** முதல் **6** வரையிலான விதிமுறைகளின்படி அவர்களது விவசாய பூமியை நேரில் புலத் தணிக்கை செய்து கருணையின் அடிப்படையிலும், விவசாய தொழிலின் நன்மை கருதியும், அவர்களது விவசாய தொழில் நலிவடையாமலிருக்க அவர்களது விவசாய மின்னிணைப்பை கணபதி பகிர்மான வட்டத்திலிருந்து குரும்பபாளையம் பகிர்மான வட்டத்திற்கு மாற்றம் செய்ய உத்தரவு வழங்க வேண்டியுள்ளார்கள்.

### 2. வழக்கின் சுருக்கம்:

**2.1.** மேல்முறையீட்டாளர்கள் **028–001–972** மற்றும் **026–001–580** ஆகிய விவசாய மின்னிணைப்புகளுக்கு உரிமையாளர்.

**2.2.** மேற்கண்ட மின்னிணைப்புகளை கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம் / மாநகரம் ஆளுகைக்கு உட்பட்ட கணபதி பகிர்மானத்திலிருந்து கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம் / வடக்கின் ஆளுகைக்குட்பட்ட குரும்பபாளையம் பகிர்மான பகுதியிலுள்ள அவருக்குச் சொந்தமான கிணற்றிற்கு மாற்றியமைக்க வேண்டுமென்று கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/மாநகரத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.3. மன்றம் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

2.4. மன்றத்தின் ஆணையில் திருப்தியில்லாததால், மேல்முறையீட்டாளர் இந்த மேல் முறையீட்டு மனுவை, மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மன்றத்தின் தீர்வு:</u>

கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/மாநகரத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 7.4.2015 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"Findings :*
*xxx xxx xxx*
*Hence the Chairman of this forum opined that the Petitioner request for shifting of their Agricultural SC No.026 001 972 of Ganapathy Section of Urban / CBE Division of CEDC / Metro / Coimbatore to Kurumbapalayam Section of North Circle is not considered for the following reasons :-*

1. *The reason requested by the Petitioner for shifting of existing Agricultural S.C.No.026 001 972 is not due to dryness or insufficient water in the existing well / borewell.*

2. *No instruction is available for shifting of Agricultural service connection from one circle to another circle.*

3. *As per the instruction issued by TANGEDCO vide Lr.No.SE-RE&ID/EE/RE/A1/F DOC/D 1519/11 dt. 1.12.2011, shifting of existing agricultural service connection is not feasible as in the existing land there is no Agricultural activity.*

*The Forum decides that the grievance of the Appellant is beyond the purview of CGRF as vested by TNERC Notification No.TNERC/CGR&EO/6/1 dated 8.1.2004 clause 2 f (iii)."*

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>

4.1. <u>மின்னிணைப்பு எண் 026–001–972</u>

(i) மேல்முறையீட்டாளருக்கு கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர் வடக்கு வட்டம் கணபதி கிராமம் க.ச.எண். 113/2D1, 113/ 2D3 (மாநகராட்சி வார்டு எண் 23 பிளாக் எண்

08 நகர புல எண் 3/2, 3/4, 5/2, 13/2 ) காலைகளின்படி 1–10 ஏக்கர் புஞ்சை பூமியும் அதிலுள்ள ஆழ்குழாய் கிணற்றின் S.C. எண் 026 001 972 விவசாய மின்ணைப்பும் பாத்தியப்பட்டதாகும்.

(ii) அவர்களது விவசாய பூமியானது மாநகராட்சியின் மையப்பகுதியில் அமைந்தும், தொழிற்கூட பகுதியாக மாறியுள்ளதாலும், நெருக்கமான குடியிருப்புகள் அமைந்துள்ளதாலும் தொடர்ந்து பூமியில் விவசாயம் செய்ய இயலவில்லை எனவும், நகர்ப்புற வாகன நெருக்கடிகளாலும் தொழிற்சாலை புகைகளாலும் மாசு ஏற்பட்டு பயிர்கள் வளர்ச்சி குன்றிய நிலையில் உள்ளதெனவும் போர்வெல் தண்ணீர் உப்பு மற்றும் ரசாயன மாசு கலந்துள்ளதால் நெல் போன்ற தானியப் பயிர்கள் விவசாயம் செய்ய இயலவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(iii) அவர்களது விவசாய பூமியிலிருந்து 08 கி.மீ. தொலைவில் உள்ள கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர் வடக்கு வட்டம் (தற்போது அன்னூர் வட்டம்) சர்கார் சாமகுளம் கிராமம் க.ச.எண் 124/1, 202/14 B, 15, 15 B, 19 B, 20 C, 23 C, 24 A, 25 A ஆகிய காலைகளின்படி 3 – 10 ஏக்கர் புஞ்சை விவசாய பூமியும் க.ச. 202 / 25 A ஆகிய காலையில் உள்ள ஆழ்குழாய் கிணறு ஒன்றும் பாத்தியப்பட்டது.

(iv) மாநகராட்சி எல்லையில் உள்ள கணபதி பகிர்மான பகுதியிலிருந்து தங்களுக்குப் பாத்தியப்பட்ட விவசாய மின்னிணைப்பை 08 கி.மீ. தொலைவில் உள்ள குரும்பபாளையம் பகிர்மான பகுதிக்கு விவசாய உபயோகத்திற்கு மாற்றி தருமாறு கோவை கணபதி உதவி பொறியாளர் அவர்களுக்கு 19.6.2014 அன்று மனுச் செய்ததை, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளாமல் 6 மாத காலம் தாமதம் செய்து 20.11.2014 ல் "THE SHIFTING OF EXISTING AGRICULTURAL SERVICE CONNECTION FROM ONE CIRCLE TO ANOTHER CIRCLE IS NOT FEASIBLE OF

COMPLIANCE AS PER RULES IN FORCE” என எழுத்து மூலம் தெரிவித்துள்ளதாகக் கூறியுள்ளார்.

(v) 14.8.2014 அன்று கோவை கணபதி உதவி மின் பொறியாளர் அவர்களுக்கும் 15.1.2015 அன்று சென்னை தலைமைப் பொறியாளர் அவர்களுக்கும், 23.2.2015 அன்று நுகர்வோர் மின் தீர்ப்பாணை மன்றம் அவர்களுக்கும் மனு செய்ததாகவும் அதன் பேரில் 7.4.2015 அன்று நேரில் ஆஜராகி மாநகரில் பெருகி வரும் வாகன அசுத்தப் புகையினாலும் சுற்றியுள்ள தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் அசுத்தப் புகையினாலும் நிலத்தடி நீர் ரசாயனக் கலவை கலந்து நீர் ஊற்றும் குறைந்துள்ளதாக தெரிவித்துள்ளார். மாநகராட்சி மையப் பகுதியில் அமைந்துள்ள தங்களது பூமியில் விவசாயம் செய்ய இயலவில்லை என்பதால் விவசாய இணைப்பை கணபதி பகிர்மான வட்டத்திலிருந்து குரும்பபாளையம் பகிர்மான வட்டத்திற்கு மாற்றம் செய்ய உத்தரவு வழங்கி விவசாயம் சிறப்படைய உறுதுணையாக இருக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அந்த மின்னிணைப்பு மாற்றத்திற்கான சிறப்பு சலுகையின்படி அரசு விதிமுறைகளுக்கும் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்படுவதாகவும் மின்னிணைப்பு மாற்றத்திற்காக அரசு நிர்ணயிக்கும் செலவினங்களை தங்களது சொந்த பொறுப்பில் ஏற்க சம்மதிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

4.2. <u>மின் இணைப்பு எண் 026–005–580</u>

(i) மேல்முறையீட்டாளருக்கு கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர் வடக்கு வட்டம் கணபதி கிராமம் க.ச.எண். 437/3 மற்றும் 440 / 2 (மாநகராட்சி வார்டு எண் 22 பிளாக் எண் 50 நகர புல எண் 76/1) காலைகளின்படி 1–15 ஏக்கர் புஞ்சை பூமியும் அதிலுள்ள ஆழ்குழாய் கிணற்றின் S.C. எண் 026 005–580 விவசாய மின்னிணைப்பும் பாத்தியப்பட்டதாகும்.

(ii) அவர்களது விவசாய பூமியானது மாநகராட்சியின் மையப்பகுதியில் அமைந்தும், தொழிற்கூட பகுதியாக மாறியுள்ளதாலும், நெருக்கமான குடியிருப்புகள் அமைந்துள்ளதாலும் தொடர்ந்து பூமியில் விவசாயம் செய்ய இயலவில்லை எனவும் நகர்ப்புற வாகன நெருக்கடிகளாலும் தொழிற்சாலை புகைகளாலும் மாசு ஏற்பட்டு பயிர்கள் வளர்ச்சி குன்றிய நிலையில் உள்ளதெனவும் போர்வெல் தண்ணீர் உப்பு மற்றும் ரசாயன மாசு கலந்துள்ளதால் நெல் போன்ற தானியப் பயிர்கள் விவசாயம் செய்ய இயலவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(iii) அவர்களது விவசாய பூமியிலிருந்து 08 கி.மீ. தொலைவில் உள்ள கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர் வடக்கு வட்டம் (தற்போது அன்னூர் வட்டம்) சர்கார் சாமகுளம் கிராமம் க.ச.எண் 212/3 மற்றும் 212/4 காலைகளின்படி 3.77 ஏக்கர் புஞ்சை விவசாய பூமியும் ஆழ்குழாய் கிணறு ஒன்றும் பாத்தியப்பட்டது.

(iv) மாநகராட்சி எல்லையில் உள்ள கணபதி பகிர்மான பகுதியிலிருந்து தங்களுக்குப் பாத்தியப்பட்ட விவசாய மின்னிணைப்பை 08 கி.மீ. தொலைவில் உள்ள குரும்பபாளையம் பகிர்மான பகுதிக்கு விவசாய உபயோகத்திற்கு மாற்றி தருமாறு கோவை கணபதி உதவி பொறியாளர் அவர்களுக்கு 19.6.2014 அன்று மனுச் செய்ததை, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளாமல் 6 மாத காலம் தாமதம் செய்து 20.11.2014 ல் "THE SHIFTING OF EXISTING AGRICULTURAL SERVICE CONNECTION FROM ONE CIRCLE TO ANOTHER CIRCLE IS NOT FEASIBLE OF COMPLIANCE AS PER RULES IN FORCE" என எழுத்து மூலம் தெரிவித்துள்ளதாகக் கூறியுள்ளார்.

(v) 14.8.2014 அன்று கோவை கணபதி உதவி மின் பொறியாளர் அவர்களுக்கும் 15.1.2015 அன்று சென்னை தலைமைப் பொறியாளர் அவர்களுக்கும், 23.2.2015 அன்று நுகர்வோர் மின் தீர்ப்பாணை மன்றம் அவர்களுக்கும் மனு செய்ததாகவும் அதன் பேரில் 7.4.2015

அன்று நேரில் ஆஜராகி மாநகரில் பெருகி வரும் வாகன அசுத்தப் புகையினாலும் சுற்றியுள்ள தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் அசுத்தப் புகையினாலும் நிலத்தடி நீர் ரசாயனக் கலவை கலந்து நீர் ஊற்றும் குறைந்துள்ளதாக தெரிவித்துள்ளார். மாநகராட்சி மையப் பகுதியில் அமைந்துள்ள தங்களது பூமியில் விவசாயம் செய்ய இயலவில்லை என்பதால் விவசாய இணைப்பை கணபதி பகிர்மான வட்டத்திலிருந்து குரும்பபாளையம் பகிர்மான வட்டத்திற்கு மாற்றம் செய்ய உத்தரவு வழங்கி விவசாயம் சிறப்படைய உறுதுணையாக இருக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அந்த மின்னிணைப்பு மாற்றத்திற்கான சிறப்பு சலுகையின்படி அரசு விதிமுறைகளுக்கும் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்படுவதாகவும் மின்னிணைப்பு மாற்றத்திற்காக அரசு நிர்ணயிக்கும் செலவினங்களை தங்களது சொந்த பொறுப்பில் ஏற்க சம்மதிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

4.3. அவர்கள் மனு செய்து நீண்ட நாட்களாக சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளிடமிருந்து எந்த உத்தரவும் வரப்பெறாததால் தங்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று அதிகாரிகள் விவசாய மின்னிணைப்பை மாற்றி தருவார்கள் என்ற நம்பிக்கையில் தங்கள் பூமியின் ஒரு பகுதியை தொழிற்கூடமாகவும், குடியிருப்பு பகுதியாகவும் மாற்றியமைத்து மீதமுள்ள நிலத்தில் தென்னை, காய்கறிகள் மற்றும் சோளம் ஆகியவைகளை விவசாயம் செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார். விவசாய மின்னிணைப்பை இட மாற்றம் செய்வது குறித்து கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளை குறித்து சென்னை தலைமைப் பொறியாளர் அவர்களின் 1.12.2011 தேதிய சுற்றறிக்கை கடித எண் SE / RE&I(D)/ EE/ RE/ A1/ Doc/ D1519/ 2011 குறிப்பாணையில் குறிப்பிட்ட 1 முதல் 6 வரையிலான விதிமுறைகளின்படி தங்களது கோரிக்கை உட்பட்டுள்ளதால் தங்களது விவசாய பூமியை நேரில் புலத்தணிக்கை செய்து கருணையின் அடிப்படையிலும் விவசாய தொழிலின் நன்மை கருதியும் தங்களின்

விவசாய தொழில் நலிவடையாமல் இருக்க தங்களது விவசாய மின்னிணைப்பை கணபதி பகிர்மான வட்டத்திலிருந்து குரும்பபாளையம் பகிர்மான வட்டத்திற்கு மாற்றம் செய்ய உத்தரவு வழங்க வேண்டியுள்ளனர்.

**5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>**

**5.1. <u>விவசாய மின்னிணைப்பு எண் 026–001–972</u>**

(i) விவசாய மின் இணைப்புகளை தற்போதுள்ள வாரிய விதிமுறைகளின்படி ஒரு வட்டத்திற்குள்ளே மட்டுமே இடமாற்றம் செய்யலாம் எனவே, ஒரு வட்டத்தில் உள்ள விவசாய மின்இணைப்பை வேறு ஒரு வட்டத்திற்கு இடமாற்றம் செய்ய இயலாது. ஆகையால் மேல்முறையீட்டாளரின் விவசாய மின்இணைப்பை கோவை மாநகர் வட்டத்திலிருந்து கோவை வடக்கு வட்டத்திற்கு மாற்றம் செய்ய இயலாது.

(ii) மேல்முறையீட்டாளரின் விவசாய மின்னிணைப்பு 026–001–972 உள்ள இடத்தை 3.3.2015 செயற்பொறியாளர் நகரியம் அவர்களால் ஆய்வு செய்யப்பட்ட பொழுது விவசாய உபயோகம் எதுவுமில்லாமல் குடியிருப்பு பகுதியாக உபயோகப்படுத்தப்பட்டு வருவது தெரிய வந்ததும் வாரிய விதி கடித எண் SE/RE&I(D)/EE/RE/A1/Doc/D1519/2011 நாள் 1.12.2011 ல் கீழ் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

*“ 1.0 shifting of existing agricultural service connection may be permitted only if the existing and proposed locations of the land and well / bore well are having agricultural operations.”*

எனவே. மேல்முறையீட்டாளரின் விவசாய மின்னிணைப்பை மாற்றம் செய்யும் கோரிக்கையைவாரிய விதி க.எண். SE/RE&I(D)/EE/RE/A1/Doc/D1519/2011 நாள் 1.12.2011 ன்படி ஏற்க இயலாது.

**5.2. <u>விவசாய மின்னிணைப்பு எண் 026–001–580</u>**

(i) மேல்முறையீட்டாளரின் விவசாய மின்னிணைப்பை ஒரு வட்டத்திற்குள்ளே மட்டும் இருந்தால் இடமாற்றம் செய்யலாம். ஆனால் ஒரு வட்டத்தில் உள்ள விவசாய மின்னிணைப்பை வாரிய விதிமுறைப்படி வேறு ஒரு வட்டத்திற்கு இடமாற்றம் செய்யவியலாது. ஆகையால் மேல் முறையீட்டாளரின் விவசாய மின்னிணைப்பை கோவை மாநகர் வட்டத்திலிருந்து கோவை வடக்கு வட்டத்திற்கு மாற்றம் செய்யவியலாது என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(ii) மேல்முறையீட்டாளரின் விவசாய மின்னிணைப்பு 026–001–580 உள்ள இடத்தை 3.3.2015 அன்று ஆய்வு செய்யப்பட்டதில் விவசாய உபயோகம் எதுவுமில்லாமல் தொழிற்சாலை உபயோகத்திற்கும் தொழிலாளர்கள் தங்குமிடமாகவும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆகையால், மேல் முறையீட்டாளரின் விவசாய மின்னிணைப்பை மாற்றம் செய்யும் கோரிக்கையை வாரிய விதிகளின்படி ஏற்கவியலாது என தெரிவித்தார்.

(vi) **<u>மின்குறை தீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

**6.1.** மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக கேட்புரை 11.9.2015 அன்று நடைபெறும் என்று இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது. 11.9.2015 அன்று மேல்முறையீட்டாளரின் சார்பில் கலந்து கொண்ட திரு. M. சரவணகுமார், வழக்கறிஞர் அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க மேற்கண்ட கேட்புரை ஒத்திவைக்கப்பட்டு 29.10.2015 அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. 29.10.2015 அன்றும் மேல்முறையீட்டாளர் சார்பில்

மீண்டும் தள்ளிவைக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டது. எனவே, அந்த கேட்புரையும் ஒத்திவைக்கப்பட்டு 17.12.2015 அன்று கேட்புரை நடத்தப்பட்டது.

6.2. எதிர்மனுதாரரின் சார்பில் 11.9.2015 அன்று திரு.சுந்தரம், உதவி செயற்பொறியாளர்/ பீளமேடு அவர்களும் 29.10.2015 அன்று திரு. P. முருகேசன், உதவி பொறியாளர்/ கணபதி அவர்களும் கலந்து கொண்டனர்.

6.3. 17.12.2015 அன்று மேல்முறையீட்டாளர் சார்பில் திரு V. ஹரிதாசன் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6.4. 17.12.2015 அன்று எதிர் மனுதாரர் சார்பில் திரு. P. முருகேசன், உதவி பொறியாளர் / கணபதி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7. **<u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>**

7.1. மேல்முறையீட்டாளரின் சார்பில் கேட்புரையில் கலந்து கொண்டு திரு.ஹரிதாசன் அவர்கள் மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2. மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி அவர்கள், மின்னிணைப்பு எண் 972 உள்ள நிலத்தில் தென்னை மரங்கள் உள்ளனவென்றும், காலியிடத்தில் சுமார் 10 தென்னைகள் உள்ளன என்றும் வாதிட்டு, எனவே, மேற்கண்ட மின்னிணைப்பு உள்ள இடத்தில் விவசாய வேலைகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன என்று வாதிட்டார்.

7.3. மேலும் அங்கு விவசாயம் செய்யப்படுகிறது என்பதற்கு ஆதாரமாக தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அளித்துள்ள 1419 ஆண்டு பசலி முதல் 1424 ஆண்டு வரையிலான பசலி அடங்கல் கணக்குகளையும் சமர்ப்பித்துள்ளார்.

7.4. மேலும், தற்பொழுது மின்னிணைப்பு எண் 972 ஐ உபயோகித்து எந்த விதமான விவசாய நடவடிக்கையும் இல்லை என்றும் ஆனால் விண்ணப்பம் சமர்ப்பித்த போது விவசாயம் நடைபெற்றது என்றும் வாதிட்டுள்ளார்.

7.5. மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி மின்னிணைப்பு எண் 580–ல் வாழை பயிரிடப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதற்கு ஆதாரமாக சில புகைப்பட நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

7.6. மேலும், 1423 ஆம் ஆண்டு பசலியில் தென்னை, வாழை, கத்தரி, வெண்டை ஆகியவை பயிரிடப்பட்டுள்ளன என்றும் வாதிட்டு அதற்கு ஆதாரமாக தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கோவை வடக்கு அவர்கள் அளித்துள்ள அடங்கல் கணக்குகளின் நகல்களை சமர்ப்பித்துள்ளார்.

7.7. மேலும் நீர்வளம் மாசுப்பட்டுள்ளதால், அந்த நிலங்கள் பயிர் செய்வதற்கு ஏற்புடையதாக இல்லை என்றும் வாதிட்டார்.

7.8. மின்னிணைப்பை மாற்றியமைக்க வேண்டிய நிலத்தில் விவசாயம் நடைபெறுகிறதென்றும், மேற்கண்ட மின்னிணைப்புகளை மாற்ற அனுமதி அளித்தால் அங்கு விவசாயம் செய்து தேவையான விவசாய உற்பத்தியை அதிகரித்து நாட்டின் விவசாய பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்வதில் உதவ முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று வாதிட்டார். மின் இணைப்பை மாற்ற கோரும் நிலங்கள் ஏற்கனவே மின் இணைப்பு உள்ள நிலங்களிலிருந்து சுமார் 8 கி.மீ. தூரத்தில்தான் உள்ளது என்பதால், ஒரே மின்சார பகிர்மான வட்டத்திற்குள் இல்லை என்று தெரிவித்து மின்னிணைப்பை மாற்ற முடியாது என்று வாதிடுவது நியாயமல்ல என்றும் வாதிட்டார்.

7.9. ஒரு மின்சார பகிர்மான வட்டத்திற்குள் உள்ள விவசாய மின் இணைப்பை கோட்டம் விட்டு கோட்டத்திற்கு மாற்றுவதற்கு வாரிய விதிகள் அனுமதிக்கின்றன, ஆனால், 8 கி.மீ. தூரத்திலுள்ள அடுத்த மின்பகிர்மான வட்டத்திலுள்ள கிணற்றிற்கு மாற்ற முடியாது என்பது நியாயமல்ல என்றும் வாதிட்டார்.

## 8. <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

8.1. எதிர்மனுதாரரின் சார்பில் கேட்புரையில் கலந்து கொண்ட திரு. P. முருகேசன், உதவி பொறியாளர் / கணபதி அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2. இரண்டு மின்னிணைப்பு உள்ள இடங்களிலும், தற்பொழுது விவசாயம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அவைகள் குடியிருப்பு மற்றும் தொழிற்சாலை, தொழிலாளர்கள் தங்கும் இடமாகத் தான் உபயோகப்படுத்தப்படுகின்றன என்றும் வாதிட்டார்.

8.3. மேலும், வாரியத்தின் விதிகளின்படி, ஒரு மின்சாரபகிர்மான வட்டத்திற்குள் தான் ஏற்கனவே இருக்கும் விவசாய மின்னிணைப்பை வேறு இடத்திற்கு மாற்ற முடியும். ஆனால், இங்கு மின்னிணைப்பு உள்ளது கோயபப்புத்தூர் / மின் பகிர்மான வட்டம் / மாநகரம் ஆகும். ஆனால் மின்னிணைப்பை மாற்ற வேண்டிய இடம் உள்ள வட்டம் கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம் / வடக்கு. எனவே, மின்னிணைப்பு மாற்றம் விதிகளின்படி முடியாது என்று வாதிட்டார்.

8.4. மேலும், தற்பொழுது விவசாய மின்னிணைப்பு உள்ள இடத்திலும் அந்த மின்னிணைப்பு மாற்றி வைக்க வேண்டிய இடத்திலும் விவசாயம் நடைபெற்று கொண்டு இருக்க வேண்டும். ஆனால், மின்னிணைப்பு இருக்கும் இடத்தில் விவசாய உபயோகம் இல்லை எனவே, மின்னிணைப்பை மாற்றுவது விதிகளின்படி சரியல்ல என்று வாதிட்டுள்ளார்.

மேலும், இரண்டு இடங்களும் செயற் பொறியாளர் / நகரியம் அவர்களால் 3.3.2015 ல் ஆய்வு செய்யப்பட்டதில், இரண்டு மின்னிணைப்பு உள்ள இடங்களிலும் விவசாய பயன்பாடு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

9. <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

**9.1.** மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரது பதிலுரையிலுள்ள வாதங்கள் இரு தரப்பினராலும் கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது, கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு விவசாய மின்னிணைப்பை வேறு கிணற்றிற்கு மாற்ற வேண்டும் எனில் கடைபிடிக்க வேண்டிய விதிகள் என்ன ?

(ii) மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான விவசாய மின்னிணைப்பு எண் 026–001–580 மற்றும் 026–001–972 ஆகியவற்றை இப்பொழுது உள்ள கிணற்றிலிருந்து கோவை மின் பகிர்மான வட்டம் / வடக்கு அதிகார வரம்பிற்கு உட்பட்ட கிணறுகளுக்கு மாற்ற வேண்டும் என்பது ஏற்புடையது தானா ?

10. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>

**10.1.** விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்திலுள்ள சர்வே எண்ணிலுள்ள கிணற்றிற்கு பதில் வேறு சர்வே எண்ணிலுள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்குவது சம்பந்தமாக தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பு மற்றும் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு ஆகியவைகளில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமம்தாரர் ஏற்படுத்திய விதிகளைத்தான் பின்பற்றவேண்டும். இது சம்பந்தமான மின்சார வாரியத்திலுள்ள சம்பந்தப்பட்ட ஆணைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(A) **<u>Memo No.SE/RE&LL/LO/AE4/GW/114/dt. 17-03-1978:-</u>**

It has been brought to notice that many new applicants for power supply try to take advantage of the relaxations given in the two memos quoted under ref.1 and 2 for shifting of services and attempt to get supply

circumventing the priority by initially stating that they are co-owners of wells and later on applying for shifting their service to a new location on the plea of “Non-availability of water”.

The instructions issued in memos cited 1 and 2 are therefore partially modified as under :

1. The words “non-availability of water” in memo cited (1) are “hereby” deleted.
2. Shifting of agricultural service to a new location may be permitted for the same person due to dryness of well provided the new location is in the same village. The work of shifting should be done as deposit contribution work.
3. Shifting should not be permitted to a new location outside the village. Such cases should be treated as new applications for power supply and dealt with as per rules according to priority, technical feasibility and viability of each work.
4. Shifting of pump sets of enlisting co-owners of wells can also be done as per (2) above only.
5. Extension of supply to new applicants as co-owners of wells may be effected provided their ownership of well is certified by an officer of the Revenue Department not below the rank of a Tahsildar and (2) it is accompanied by a certificate from the Project Officer (ARDC) to the effect that there is adequate water for both the pump sets in the same well.

(B) Chairman Memo No.SE/RE/DE/SS/A1/C 473-1/83, dated 05-12-1983.

1. Shifting of agricultural services from the existing well to another well can be permitted in respect of the following cases subject to technical feasibility:-

   (i) Shifting from one well to another belonging to the same consumer within the same distribution group of transformers irrespective of the village and

   (ii) Shifting from one well to another belonging to the same consumer within the same village even if it involves a change from one distribution group of transformers to another.

2. The above work will be done as a deposit contribution work.

3. This concession will be applicable even in respect of pending applications i.e. where the service has still not been sanctioned but the applicant desires to change the location of the service to another well owned by him.

4. Particular care should be taken to ensure that this concession is not abused for trafficking in agricultural service connections. The Assistant Divisional Engineer concerned should personally enquire into the case and satisfy himself that the new well and the lands to be irrigated by it belong to the consumer and the request of the consumer is for bonafide reasons. He should record his inspection note in this regard on the relevant file.

(C) <u>Memo No.SE/RE&I/(D)/DE/SS/A1/C473-3/84,(Technical Branch), dated 10-07-1984</u>

Sub: Electricity – shifting of services from one well to another
Ref: Memo No.SE/RE&I(D)/DE/SS/A1/C/473-1/84, dt.5.12.83.
Memo No.SE/RE&!(D)/DE/SS/A1/C.473-2/84, dt.17.5.84

****

Further, to the instructions issued to memos cited on shifting of agricultural services at the request of the consumers the following instructions are issued.

Requests for extension of supply to a well owned by the applicant in a different location in lieu of the one for which application was presented may also be considered even if estimate for the work has been sanctioned subject to the condition that the works should not have been taken up as on the date of request of the applicant.

Conditions outlined in paras 1 and 2 of memo cited vide ref.(1) shall however be applicable for such shifting and instructions contained in para4 of the memo should be scrupulously followed.

(D) <u>Memo No.SE /RE&I/(D)/DE(SS)/AE.w1/C473-5/84,(Technical Branch), dt, 7-1-1985</u>

Sub: Electricity – shifting of agricultural service from one well to another - reg.
Ref: (i) Memo No.SE/RE&I(D)/DE(SS)/A1/C/473-1/84, dt.5.12.83.
(ii) Memo No.SE/RE&!(D)/DE/(SS)/A1/C.473-2/84, dt.17.5.84.
(iii) Memo No.SE/RE&!(D)/DE/(SS)/A1/C.473-3/84, dt.10.7.84.

****

The last para of the memo third cited shall be deleted and the following shall be substituted.

Conditions outlined in paras (1) subparas (i) and (ii) and para (4) of memos cited vide ref.(1) shall however be applicable for such shifting and instructions contained in paras should be scrupulously followed.

(E) Chairman's Circular Memo No.SE/IEMC/EE3/AEE2/D.408/90 (Technical Branch), dated 30-07-1990

*********

Shifting of agricultural service connection from the existing well to another well in another village belonging to the same consumer may be permitted in the case of the proposed well, being located within the jurisdiction of the same Section even if it is not in the same distribution group transformers. However, such cases shall be permitted by Superintending Engineer of the Circle concerned with on receipt of personal site inspection reports by the Assistant Executive Engineer on the genuineness of the case. Each case shall be carefully examined and orders passed by the Superintending Engineer based on the norms of each case to ensure against abuse.

(F) Circular Memo No. SE/IEMC/EEs/AEE2/AE/F III/A-13(Tech Branch), dated 06-12-1997.

xxxx xxxx xxxx

In modification to the orders already issued in the reference cited, the shifting of agricultural service connection from the existing well to the another well belonging to the same consumer may be permitted in the case of the proposed well being located within the jurisdiction of the same division with other conditions remain the same. However, such case shall be permitted by the Superintending Engineer of the circle concerned with on receipt of personal site inspection reports by the Executive Engineer / Operation & Maintenance concerned on the genuineness of the case. Each case shall be carefully examined and order passed by the Superintending Engineer based on the merits of each cases.

*************

(G) Memorandum No.SE/IEMC/EE3/AEE2/AE/F.S. 23/D.382/89,(Techl.Br.) dated 02-07-1999.

*************

(i) If any consumer under normal priority requests for change of well from the original location to a new location, then no increase in the load will be permitted, under normal priority.

(ii) If the applicant, under normal priority requests for change of well from the original location to a new location with the increase in load then, he may be asked to avail supply under RSFS in the application stage itself.

(iii) If the consumer does not agree for the above, shifting alone may be permitted for the original load, if the required conditions for shifting are satisfied.

(H) Memo No.SE/RE&1(D)/EE/RE/A1/F.Doc/D.2841/04, (Technical Branch), dated 10-12-2004.

xxx xxxxx xxxx

Of late, clarifications are being requested by the field SEs / CEs in shifting of agriculture service connection effected under SFS category. Shifting of agricultural service to another well belonging to the same party is to be considered only when the existing well has gone dry.

********

(I) Letter No.SE/RE&I(D)/EE/RE/A1F.Doc/D.655/2008 (Technical Branch), dated 05-05-2008.

In modification to the orders already issued in the reference cited, the shifting of agricultural service connection from the existing well to the another well belonging to the same consumer from one division to another division within the Circle may be permitted by the Superintending Engineer of the Circle concerned.

(i) with on receipt of personal site inspection reports by EE / O & M concerned on the genuineness of the case and

(ii) with the condition that the date of registration of application of the service for which shifting is requested should be cleared in the Division for which shifting is proposed.

The other conditions applicable for shifting remain the same. The above instructions also applicable for pending applications, with the above conditions and the service may be effected under the category for which supply is requested.

(J) <u>Letter No,SE.RE I(D).EE.RE.1.F,Doc,.D,1519 .11Ï dt,1.12.2011</u>

Sub: Electricity – shifting of agricultural service connection – Reg.

Ref: 1. This Office Lr.No.SE/RE&1/(D)/EE/RE/A1/D241, dt.15.2.2011.
2. This Office Lr.No.SE/RE&I(D)/EE/RE/A1/D6558 dt.6.6.2008

*******

In the reference (1) letter cited, instructions were issued to consider shifting of agricultural service connection irrespective of the reasons submitted by the applicant under DCW basis.

In supersession of the instructions issued vide reference (1) letter, the following instructions are issued in addition to the instruction issued vide reference (2) letter cited:-

1.0. Shifting of existing agriculture service connection may be permitted only if the existing and proposed location of the land and well/bore well are having agriculture operations.

2.0. The shifting of agriculture service connection may be considered in case of dryness, insufficient water and due to water pollution in the existing well / bore well.

3.0. Necessary certificate from the concerned authorities should be obtained for the reasons stated by the applicant.

4.0. Shifting of existing agriculture service connection should be done under DCW basis.

5.0. These instructions are applicable for all categories of existing agriculture service connections such as Normal, RSFS Schemes, etc.

6.0. This is also applicable for change of location of the well / bore well requested at the application stage itself.

**10.2.** மேற்கண்ட சுற்றறிக்கை, மற்றும் குறிப்பாணைகளின்படி கீழ்க்கண்ட விதிகளின் பேரில்தான் விவசாய மின்இணைப்பு (அல்லது) விவசாய இணைப்பு விண்ணப்பத்தின் மனுவை வேறு கிணற்றிற்கு மாற்ற முடியும் என்று தெரிகிறது.

(i) கிணற்றில் தண்ணீர் இல்லை என்றாலும் நீர் விவசாயத்திற்கு தேவையான அளவு இல்லையென்றாலும், நீர் மாசுபட்டு இருந்தாலும் ஒருவரின் விவசாய மின்இணைப்பு அவருக்குச் சொந்தமான வேறு கிணற்றிற்கு மாற்றப்படலாம். ஆனால், மாற்றப்படுவதற்கு கூறப்படும் காரணத்திற்கான சான்றுகள் சம்பந்தப்பட்ட அதிகாரம் உள்ளவர்களிடமிருந்து பெறப்பட்டு இருக்க வேண்டும்.

(ii) இரண்டு கிணறுகளும் ஒரே மின்பகிர்மானத்திலுள்ள மின்மாற்றிகளில் இருக்கவேண்டும். அவ்வாறு இருக்கும்பட்சத்தில் அவை வேறு கிராமங்களில் இருக்கலாம்.

(iii) இரண்டு கிணறுகளும் ஒரே கிராமத்தில் இருந்தால் மின்பகிர்மானம் வேறாக இருந்தாலும், மாற்றப்படலாம்.

(iv) மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு ஆனால் வேலை தொடங்கப்படாமல் இருக்கும் நிலுவையிலுள்ள விண்ணப்பங்களுக்கும் இது பொருந்தும். இந்தச் சலுகையை (concession) தவறாக பயன்படுத்தப்படக்கூடாது என்பதற்காக அந்த பகுதி உதவி கோட்ட பொறியாளரால் விசாரிக்கப்பட்டு புதிய கிணறும், நீர் பயன்படுத்தப்படும் நிலங்களும், நுகர்வோருக்கே சொந்தம் என்பதையும், நுகர்வோரின் கோரிக்கை உண்மையான காரணங்களுக்காகத்தான் (bonafide reasons) என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் உதவி கோட்ட பொறியாளரின் அறிக்கை அந்தக் கோப்பில் இடம் பெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(v) மேலும் அந்த வேலைக்கு ஆகும் செலவை, நுகர்வோரிடம் வசூலிக்க வேண்டும். மதிப்பீடு DCWல் செய்யப்படவேண்டும். ஆனால், நிலுவையிலுள்ள விண்ணப்பத்திலுள்ள கிணற்றிற்கு பதில் வேறு கிணற்றில் பெற விரும்பினால்

DCW முறையில் மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியமில்லை. (DCW-ல் செய்யவேண்டும் என்ற நிபந்தனை 7.1.1985 நாளிட்ட வாரியத்தால் இடப்பட்டுள்ள ஆணையில் நீக்கப்பட்டுள்ளது)

(vi) (அ) சாதரண வரிசையில்(Normal priority) உள்ள நுகர்வோர், கிணறு மாற்ற விரும்பினால், மின்பளுவை (load) அதிகரிப்பதற்கு அனுமதியில்லை.

(ஆ) சாதாரண வரிசையில் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர் மின்பளுவை அதிகரிக்க வேண்டும் என்றால், விண்ணப்பதாரர், மின்இணைப்பை SFS முறையில் பெற வேண்டும்.

(இ) மேற்கண்ட முறையில் (SFS–ல்) மின்இணைப்பை பெற விரும்பாவிடில், விண்ணப்பித்த மின்பளுவுடன் கிணறு மாற்றப்படலாம், மற்ற மாற்றத்திற்கான விதிகள் நிறைவு செய்யப்படவேண்டும்.

(vii) SFS முறையில் பெறப்பட்ட மின்இணைப்புகளும், விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிமுறைகளின்படி இருந்தால் மாற்றிக் கொள்ளலாம்.

(viii) ஒரே பிரிவு அலுவலகத்தின் எல்லைக்குட்பட்டு வரும் ஒரு கிராமத்திலுள்ள கிணற்றிலிருந்து மறு கிராமத்திலுள்ள கிணற்றிற்கு அவை வெவ்வேறு மின்பகிர்மான மின்மாற்றிகளில் இருந்தாலும் மாற்றம் செய்யலாம். ஆனால் அந்த விண்ணப்பத்தின் நம்பகத் தன்மையைபற்றி உதவி செயற்பொறியாளரின் ஆய்வறிக்கையின் பேரில் மேற்பார்வை பொறியாளரால் அனுமதி அளிக்கப்படவேண்டும்.

(ix) ஒரு கோட்டத்திற்குள் இருக்கும் ஒரு கிணற்றிலிருந்து மற்றொரு கிணற்றிற்கு மாற்றம் கோரும் விண்ணப்பத்தின் நம்பகத் தன்மையை, அந்த கோட்டத்தின்

செயற்பொறியாளர் ஆராய்ந்து அளிக்கும் அறிக்கையின் பேரில் மேற்பார்வை பொறியாளரால் அனுமதி அளிக்கப்படலாம்.

(x) ஒரு கோட்டத்திலுள்ள விவசாய மின்இணைப்பு வேறுகோட்டத்திலுள்ள அந்த மின்நுகர்வோருக்குச் சொந்தமான கிணற்றிற்கு மாற்றிக் கொள்ள மேற்பார்வை பொறியாளர் அனுமதிப்பதற்கு கீழ்கண்ட விதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

(அ) செயற்பொறியாளர் அவர்கள் அந்த இடத்தை ஆராய்ந்து அந்த விண்ணப்பத்தின் நம்பகத்தன்மை (genuineness) ஐ பற்றி சான்று அளித்திருக்க வேண்டும்.

(ஆ) எந்த விண்ணப்பத்திற்கு கிணறு மாற்றம் கோரப்படுகிறதோ அந்த விண்ணப்பத்தின் பதிவு தேதி வரை உள்ள விண்ணப்பம் மாற்றம் கோரப்படுகிற கோட்டத்தில் மின்னிணைப்பு பெற்றிருக்க வேண்டும்.

**11. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு:</u>**

**11.1.** மேல்முறையீட்டாளர் விவசாய மின்னிணைப்பு எண் 026–001–580 கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம் கணபதி கிராமம் க.ச. எண் 437/3 மற்றும் 440/2 ல் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் கொடுக்கப்பட்டுள்ளதென்றும் மேற்படி விவசாய பூமியானது மாநகராட்சியின் மையப்பபகுதியில் அமைந்து தொழிற்கூட பகுதியாக மாறியுள்ளதாலும், நெருக்கமான குடியிருப்புகள் அமைந்துள்ளதாலும், தொடர்ந்து பூமியில் விவசாயம் செய்ய இயலவில்லை என்றம், நகர்புற வாகன நெருக்கடிகளாலும், தொழிற்சாலை புகையாலும், மாசு ஏற்பட்டு பயிர்கள் வளர்ச்சி குன்றிய நிலையில் உள்ளது. என்றும், போர்வெல் தண்ணீர் உப்பு மற்றும் ரசாயன மாசு கலந்துள்ளதால் நெல் போன்ற தானிய பயிர்களை விவசாயம் செய்ய முடியவில்லை என்று வாதிட்டுள்ளார்.

11.2. மேலும் மேற்படி நிலத்தில் 1419 ஆம் பசலி முதல் 1424 ஆம் பசலி வரையில் கீழ்கண்டவாறு பயிர்கள் செய்யப்பட்டுள்ளன என்பதற்கு ஆதாரமாக தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கோவை வடக்கு அவர்கள் கையொப்பமிட்டுள்ள சாகுபடி அடங்கல் கணக்கின் நகல்களையும் சமர்ப்பித்துள்ளார். அந்த சாகுபடி அடங்களின்படி கீழ்கண்டவைகளை அறிய முடிகிறது.

| சர்வே எண். | பசலி ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1419 ஆம் பசலி | 1420 ஆம் பசலி | 1421 ஆம் பசலி | 1422 ஆம் பசலி | 1423 ஆம் பசலி | 1424 ஆம் பசலி |
| 437/3 | தென்னை வாழை கத்தரி | தென்னை வாழை கத்தரி | தென்னை வாழை கத்தரி | தென்னை கத்தரி வாழை | வாழை தென்னை நிலக்கடலை | தென்னை கத்தரி வாழை |
| 440/2 | தென்னை வாழை | தென்னை வாழை | தென்னை வாழை | தென்னை வாழை வெண்டை | தென்னை வாழை | தென்னை வாழை வெண்டை |

11.3. மேலும், அங்கு வாழை பயிரிடப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரமாக 2.9.2015 ல் எடுக்கப்பட்டுள்ள புகைப்படங்களையும் கேட்புரை நாளில் சமர்ப்பித்து விவசாயம் தற்பொழுதும் நடைபெறுகிறதென்று வாதிட்டுள்ளார்.

11.4. மேல்முறையீட்டாளர் விவசாய மின்னிணைப்பு எண்.026–001–972–ஐ அவர்களுக்குச் சொந்தமான 8 கி.மீ. தொலைவிலுள்ள குரும்பபாளையம் பகிர்மான பகுதிக்கு மாற்றி தருமாறு கோரியுள்ளார். அந்த மின்னிணைப்பு மாற்றத்திற்கும் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் மின்னிணைப்பு எண் 026–001–580 கூறியுள்ள காரணங்கள் தான்.

11.5. மின்னிணைப்பு எண் 020–001–972 அமைந்துள்ள இடத்தில் விவசாயம் தற்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கான ஆதாரமாக தலைமையிடத்து துணை

தாசில்தார் கோயம்புத்தூர் வடக்கு அவர்களின் கையொப்பமிட்ட சாகுபடி அடங்கல் கணக்குகளின் நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

| சர்வே எண் | 1419 ஆம் பசலி | 1420 ஆம் பசலி | 1421 ஆம் பசலி | 1422 ஆம் பசலி | 1423 ஆம் பசலி | 1424 ஆம் பசலி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 113 / 2D1 | – | – | – | – | – | – | கே.வி.கார்த்திக் |
| 113 / 2D3 | தென்னை சோளம் | தென்னை சோளம் | தென்னை சோளம் | தென்னை சோளம் | தென்னை | தென்னை | (i) வேலுசாமி (வ) 1419, 1422<br>(ii) கே. வி. கார்த்திக்(வ) 1420, 1421<br>(iii) பி. ஆறுமுகம் 1423, 1424 |

**11.6.** மேலும், விவசாய மின்னிணைப்பை இடமாற்றம் செய்வதற்காக கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றிய சென்னை தலைமை பொறியாளர் அவர்கள் **1.12.2011** நாளிட்ட சுற்றறிக்கை SE/RE&I(D)/EE/RE/A1/Doc/D1519/2011 ல் குறிப்பிடப்பட்டுள்ள **1** முதல் **6** வரையிலான விதிமுறைகளின்படி அவருடைய கோரிக்கை உள்ளதால் அவருக்கு மேற்கண்ட விவசாய மின்னிணைப்புகளை கணபதி பகிர்மானத்திலிருந்து குரும்பபாளையம் பகிர்மானத்திற்கு மாற்றி தர வேண்டும் என்று கோரியுள்ளார்.

**11.7.** எதிர்மனுதாரர், மேற்கண்ட விவசாய மின்னிணைப்பு எண் **026–001–972** உள்ள இடத்தை செயற்பொறியாளர் / நகரம் **3.3.2015** அன்று ஆய்வு செய்தபோது, விவசாய உபயோகம் எதுவுமில்லாமல் குடியிருப்பு பகுதியாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார் என்று வாதிட்டுள்ளார். மேலும் விவசாய மின்னிணைப்பு **026–001–580** உள்ள இடத்திலும் **3.3.2015** அன்று செயற்பொறியாளர் / நகரம் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு விவசாய உபயோகம் இல்லாமல், தொழிற்சாலை உபயோகத்திற்கும்

தொழிலாளர் தங்கும் இடமாகவும் உபயோகப்படுத்தப்பட்டு வரப்படுகிறதென்றும் வாதிட்டுள்ளார்.

11.8. விவசாய மின்னிணைப்புகளை தற்பொழுதுள்ள வாரிய விதிகளின்படி ஒரு மின் பகிர்மான வட்டத்திற்குள் மட்டும் தான் இடமாற்றம் செய்ய முடியும். இந்த மேல்முறையீட்டாளரின் இரண்டு மின்னிணைப்புகளும் கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம் / மாநரிலிருந்து கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம் / வடக்குவிற்கு மாற்றுதல் செய்ய வேண்டியுள்ளதால், வாரிய விதிகளின்படி மாற்ற மேல் முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என்றும் வாதிட்டுள்ளார்.

11.9. என்னுடைய வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வின்படி இந்த வழக்கிலுள்ள விவசாய மின்னிணைப்புகளை வேறு கிணற்றிற்கு இடமாற்றம் செய்ய வேண்டுமெனில் கீழ்கண்ட விதிகளுக்கு இணங்க இருந்தால் தான் மாற்றம் செய்ய முடியும் என்று தெரிகிறது.

(i) மின்னிணைப்பு பெறப்பட்டுள்ள கிணற்றில் நீர் இல்லை / போதுமான அளவு இல்லை என்றாலும், அல்லது நீர் மாசுபட்டு இருந்தாலும், அந்த கிணற்றின் விவசாய மின்னிணைப்பை அந்த மின்னிணைப்பின் சொந்தக்காரருக்கு சொந்தமான வேறு இடத்திலுள்ள தற்போது விவசாயம் நடைபெறுகின்ற கிணற்றிற்கு மாற்றியமைக்கலாம்.

(ii) தேவையான நீர் இல்லை என்பதற்கோ அல்லது நீர் மாசுபட்டுள்ளது என்பதற்கோ தகுந்த அதிகாரம் பெற்றவர்களின் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(iii) விவசாய மின்னிணைப்பு தற்போதுள்ள நிலத்திலும் மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலத்திலும் விவசாயம் நடைபெற வேண்டும்.

(iv) மாற்றம் கோரும் விவசாய மின்னிணைப்பு உள்ள கிணறும், புதியதாக மாற்றி வைக்கப்படவுள்ள கிணறும் ஒரே மின்சார பகிர்மான வட்டத்திற்குள் இருக்க வேண்டும்.

(v) மேலும், அந்த மாற்றம் கோரும் விண்ணப்பத்தின் நம்பகத்தன்மையைப் பற்றி உரிய அலுவலரின் ஆய்வு அறிக்கை பெற்று (பிரிவுக்குள் என்றால்உதவி செயற்பொறியாளரும், கோட்டம் விட்டு கோட்டம் அல்லது கோட்டத்திற்குள் என்றால் செயற்பொறியாளரின்) உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், மின்னிணைப்பை மாற்றுவதற்கு ஆகும் செலவினை DCW முறையில் மதிப்பீடு செய்து அதற்காகும் செலவு தொகையை நுகர்வோரிடம் வசூலிக்க வேண்டும்.

**11.10.** **(i)** என் முன்னால் உள்ள இந்த வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள மின்னிணைப்பு எண் **026–001–580** மற்றும் **026–001–792** ஆகிய இரண்டு மின்னிணைப்பு உள்ள கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு ஆகியவற்றிலுள்ள நீர் மாசுபட்டுள்ளது என்று மேல்முறையீட்டாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு ஆதாரமாக உரிய அதிகாரம் பெற்ற அலுவலகத்திடமிருந்து சான்று எதுவும் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) மின்னிணைப்பு மாற்றங்கள் ஒரே மின் பகிர்மான வட்டத்திற்குள் இல்லை. விவசாய மின்னிணைப்பு தற்பொழுது இருக்கும் மின் பகிர்மான வட்டம் கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம் / மாநகரம். ஆனால் மாற்றி வைக்க வேண்டிய கிணறு உள்ள இடம் கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம் / வடக்கு.

**11.11.** எனவே, பத்தி **11.10**–ல் தெரிவித்துள்ள காரணங்களின்படி, மேற்கண்ட விவசாய மின்னிணைப்புகளை மாற்றம் செய்வதற்கு முடியாது என்று தெரிகிறது. எனவே, இந்த மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான, விவசாய மின்னிணைப்பு எண் **026–001–580**

மற்றும் 026–001–972 ஆகியவற்றை கோயப்புத்தூர் மின்பகிர்மான வட்டம் / மாநகர் கணபதி மின்பகிர்மானத்திலிருந்து கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம் / வடக்கிலுள்ள குரும்பபாளைய பகிர்மானத்திலுள்ள கிணறுகளுக்கு மாற்றுவது ஏற்புடையதல்ல என்று தீர்வு செய்கிறேன்.

12. முடிவுரை:

12.1 மேலே உள்ள பத்தி எண்.11.11–லுள்ள தீர்வின்படி, கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம் / மாநகரின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மாற்றம் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

12.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல் முறையீட்டு மனு எண் 48/2015 முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. P. ஆறுமுகம்,
த/பெ. பெரியசாமி கவுண்டர்,
திரு. A. கனிஷ்கா,
த/பெ ஆறுமுகம்,
43 G, கணேஷ் கார்டன்,
சத்தி ரோடு,
கணபதி அஞ்சல், கோயம்புத்தூர் 641 006.

2) மேற்பார்வை பொறியாளர்,
கோயம்புத்தூர் மின்பகிர்மானம் / மாநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத் ,
கேயம்புத்துர் – 641 012.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கோயம்புத்தூர் மின்பகிர்மானம் / மாநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத் , கேயம்புத்துர் – 641 012.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19–A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.